# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,  DHINATH DHALAM  Tamil & English daily Paper  நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 109 | வெள்ளிக்கிழமை Friday | 17.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# ஊழல் புகாரில் சிக்கினால் அமைச்சர் பதவி பறிக்கப்படும்

## முதலமைச்சர் விஜய் எச்சரிக்கை






முதல்-அமைச்சர் விஜய் தலைமையில் தமிழக அமைச்சரவை கூட்டம் இன்று நடைபெற்றது. பொது பட்ஜெட் மற்றும் வேளாண் பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய முக்கிய அறிவிப்புகள் குறித்தும்,புதிய தொழிற்சாலைகளுக்கு அனுமதி அளிப்பது குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அத்துடன், புதிய திட்டங்கள் தொடங்குவது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது. கூட்டத்தில் முதல்-அமைச்சர் விஜய் அமைச்சர்களுக்கு பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்.

ஊழல் புகாரில் சிக்கும் அமைச்சர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். தவறு செய்தால் அமைச்சர் பதவி பறிக்கப்படும். தவறு செய்பவர்களில் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்றெல்லாம் பார்க்கமாட்டேன். தவறு நடந்தது தெரிந்தால் பதவி உடனே பறிக்கப்படும். தனது தலைமையிலான தவெக அரசு வெளிப்படைத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். தவெக அரசு லஞ்சமற்ற அரசாக இருக்க வேண்டும் என்பதில் அமைச்சர்கள் உறுதியாக இருக்க வேண்டும்.

பள்ளிகளுக்கு சென்று அமைச்சர்கள் ரீல்ஸ் போடுதல் உள்ளிட்ட செயல்களில் ஈடுபடக்கூடாது. அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளுக்கு ஆய்வு என்ற பெயரில் செல்வதை அமைச்சர்கள் தவிர்க்க வேண்டும். ஆய்வு என்ற பெயரில் பள்ளிகளுக்கு சென்று செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது. அமைச்சர்கள் ரீல்ஸ் போடுதல் உள்ளிட்ட செயல்களில் ஈடுபடக்கூடாது. இவ்வாறு உத்தரவிட்டுள்ளார். அமைச்சரவை கூட்டத்தின் போது குறிப்பிட்ட சில அமைச்சர்களை குறிப்பிட்டு முதல்-அமைச்சர் விஜய் பேசியதாக தகவல் வெளியாகியுள்ளது.

காவல் மரணங்களில் அரசு சமரசம் செய்யாது; தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் கடும் நடவடிக்கை என்று அமைச்சர் நிர்மல் குமார் உறுதி அளித்துள்ளார்.

தமிழ்நாடு மின்சாரத் துறை அமைச்சர் நிர்மல் குமார், சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், "எந்த காவல் நிலையத்திலோ அல்லது சிறையிலோ, காவல் துறையினர் அல்லது சிறைத் துறை பணியாளர்களின் தவறால் மரணம் ஏற்பட்டால், அரசு எந்தவித சமரசமும் செய்யாது.

இதுதொடர்பாக, முதலமைச்சர் ஏற்கெனவே தெளிவான உத்தரவு பிறப்பித்துள்ளார். தவறு நடந்தது உறுதியானால், சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு.

முந்தைய அரசுகள் இதுபோன்ற சம்பவங்களை மூடி மறைக்க முயன்றன. ஆனால் தற்போதைய அரசு அவ்வாறு செயல்படாது. சட்டப்படி எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

முந்தைய அரசுகள் இதுபோன்ற சம்பவங்களை மூடி மறைக்க முயன்றன. ஆனால் தற்போதைய அரசு அவ்வாறு செயல்படாது. சட்டப்படி எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். புழல் சிறையில் அண்மையில் நிகழ்ந்த மரணம் குறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறது. இன்றுதான் பிரேதப் பரிசோதனை அறிக்கை கிடைத்துள்ளதால், அதனை ஆய்வு செய்து விரிவான விசாரணை நடத்தப்படும். இதுவரை அரசு நடத்திய ஆரம்பகட்ட விசாரணையில், உயிரிழந்த நபருக்கு உடல்நலப் பிரச்சனை இருந்ததாக தெரியவந்துள்ளது. இருப்பினும் அதிகாரிகள் தரப்பில் ஏதேனும் தவறு இருந்தது கண்டறியப்பட்டால் அவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். திமுகவும் அதிமுகவும் தங்களது கட்சிகளை நடத்த முடியாத நிலைக்கு வந்துள்ளன. எதிர்காலத்தில் அவை பாஜகவுடன் இணையும் சூழல் உருவாகலாம். கடந்த 50 நாட்களாக தவெக எம்எல்ஏக்களை பணம் கொடுத்து விலைக்கு வாங்க முயற்சி நடைபெற்று வருகிறது. ஒரு எம்எல்ஏவுக்கு ரூ.30 கோடி முதல் ரூ.50 கோடி வரை பேரம் பேசப்பட்டது.

முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனின் பேச்சே சில அரசியல் முடிவுகள் எட்டப்பட்டிருப்பதை வெளிப்படுத்துகின்றன. தற்போது யாருக்கு அமைச்சரவை பதவி கிடைக்கும் என்பது பற்றிய பேச்சுவார்த்தைகளே நடைபெற்று வருகின்றன" என்று தெரிவித்தார்.

நாகர்கோவிலில் நிகழ்ந்த சிறை கைதி மரண விவகாரத்தில் அமைச்சர்கள் யாரும் இறந்தவரின் குடும்பத்தினரை சந்திக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு பதிலளித்த அமைச்சர் நிர்மல் குமார், "அமைச்சரவை கூட்டம் முடிந்ததும், அரசு சார்பில் அமைச்சர்கள் அந்த குடும்பத்தினரை நேரில் சந்திக்க உள்ளனர்" என்று தெரிவித்தார்.

பழனி பத்திரப்பதிவு விவகாரம் குறித்து அமைச்சர் நிர்மல் குமார் பேசுகையில், "கடந்த ஐந்து ஆண்டுகளில் பத்திரப் பதிவுத் துறையில் மிகப்பெரிய அளவில் முறைகேடுகள் நடைபெற்றன. இரவு 10 மணி வரை கூட பத்திரப்பதிவுகள் நடைபெற்றன. முந்தைய ஆட்சியில் அமைச்சர் மூர்த்தி தலைமையில் ஒவ்வொரு அலுவலகத்திலும் 'மினிஸ்டர் கட்டிங்' என்ற பெயரில் லஞ்ச வசூல் நடைபெற்றது.

ரூ.1 லட்சம் மதிப்புள்ள சொத்து பதிவு செய்தாலும், 20 ஆயிரம் ரூபாய் வரை லஞ்சமாக வசூலிக்கப்பட்டது. இதனால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். தற்போதைய அரசு பொறுப்பேற்ற பிறகு பத்திரப்பதிவுத் துறையில் பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

# குடிநீர்த் தேவைகளை பூர்த்தி செய்ய ‘நடந்தாய் வாழி காவேரி’ திட்டத்தை செயல்படுத்த வேண்டும்; எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்






சென்னை: "வாய்ச் சவடால் அடிப்பது, ரீல்ஸ் விடுவது, குதிரை பேரம் நடத்தி ஆட்சியைக் காப்பாற்ற முயல்வது போன்ற தகிடுதத்த வேலைகளையெல்லாம் கைவிட்டுவிட்டு, விவசாயப் பெருமக்களுக்கு,குடிநீர்த்தேவைகளை பூர்த்தி செய்யும் 'நடந்தாய் வாழி காவேரி' திட்டத்தை மத்திய அரசின் துணையோடு செயல்படுத்துமாறு தவெக அரசை வலியுறுத்துகிறேன்," என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக காவிரிப் படுகைகள் வளம் பெறவும், மக்கள் நலன் பெறவும், எனது தலைமையிலான அரசு 2019-ஆம் ஆண்டு தமிழகத்தில் காவிரி ஆறு மற்றும் அதன் துணை ஆறுகளைப் புத்துயிர் பெறச் செய்தல், மேம்படுத்துதல் மற்றும் மாசுபடுவதில் இருந்து முழுமையாக மீட்டெடுத்தல் அகியவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு நடந்தாய் வாழி காவேரி என்ற ஒரு உன்னதத் திட்டத்தை முன்னெடுத்தோம்.

இதற்காக ரூ.11,250 கோடி மதிப்பீட்டில் முதல்நிலை திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பாரதப்பிரதமரிடம் நானே நேரில் வழங்கி இத்திட்டத்தை செயல்படுத்த வலியுறுத்தினேன்.

கொள்கை அளவில் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட மத்திய அரசு, நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரையிலேயே இந்தத் திட்டம் சேர்க்கப்பட்டு, அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் மத்திய அரசின் ஆலோசனையின்படி, முதற் கட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்ப அனுமதியைப் பெறுவதற்காக ஹைதராபாத்தில் உள்ள சுற்றுச்சூழல்,பாதுகாப்புப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, அனுமதியும் பெறப்பட்டது.

இந்நிலையில் 2021-ஆம் ஆண்டு தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையிலும், இத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகளுக்காக மத்திய அரசு (2024-ஆம் ஆண்டு) சுமார் ரூ. 935 கோடிக்கு ஒப்புதல் அளித்தது. இதனை மத்திய அரசு 60 சதவீதமும், மாநில அரசு 40 சதவீதமும் செலவிட ஒப்புக்கொள்ளப்பட்டது.

மக்கள் விரோத திமுக அரசால் முடக்கி வைக்கப்பட்ட 'நடந்தாய் வாழி காவேரி திட்டத்தை' மத்திய அரசின் துணையோடு உடனடியாகத் துவக்கி பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

வாய்ச்சவடால் அடிப்பது, ரீல்ஸ் விடுவது, குதிரை பேரம் நடத்தி ஆட்சியைக் காப்பாற்ற முயல்வது போன்ற தகிடுதத்த வேலைகளையெல்லாம் கைவிட்டு விட்டு, விவசாயப் பெருமக்களுக்கு, குடிநீர்த் தேவைகளை பூர்த்தி செய்யும் 'நடந்தாய் வாழி காவேரி' திட்டத்தை செயல்படுத்துமாறு தவெக அரசின் 'கனவுலக முதலமைச்சரை' வலியுறுத்துகிறேன்"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959


# தமிழ்நாட்டில் கலர் அப்பளம் விற்பனைக்கு தடை; உணவு பாதுகாப்புத்துறை அதிரடி உத்தரவு



சென்னை: தமிழ்நாட்டில் அதிக நிறமூட்டி பயன்படுத்தி விற்பனை செய்யப்படும் கலர் அப்பளத்திற்கு உணவு பாதுகாப்புத் துறை தடை விதித்துள்ளது.

தமிழ்நாட்டின் உணவு பழக்கத்தில் அப்பளம் என்பது முக்கிய பங்கு வகித்து வருகிறது. பெரும்பாலான உணவகங்களில் அன்றாடம் வாடிக்கையாளர்களுக்கு பரிமாறப்படும் உணவில் அப்பளம் கண்டிப்பாக வழங்கப்படுகிறது. அந்த வகையில், அப்பளங்களில் பல்வேறு வகைகள் உள்ளன. குறிப்பாக குழந்தைகளை கவரும் வகையில் பல்வேறு வித டிசைன்களிலும், கலர்களிலும் அப்பளங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிலையில், தமிழ்நாடு உணவு பாதுகாப்பு துறை கலர் அப்பளங்கள் குறித்து முக்கிய எச்சரிக்கையை விடுத்து ள்ளது. அதாவது, அதிக நிறமூட்டி பயன்படுத்தி விற்பனை செய்யப்படும் கலர் அப்பளங்கள் சாப்பிட்டால் செரிமான பிரச்சனை, சிறுநீரக பாதிப்பு, புற்றுநோய் வருவதற்கு வாய்ப்பு உள்ளதாகவும், உயிருக்கு ஆபத்தை விளைவிக்ககூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதுவும் குழந்தைகள் இந்த கலர் அப்பளத்தை சாப்பிட்டால் அலர்ஜி மற்றும் கவன சிதறல் உண்டாகலாம் எனவும் உணவு பாதுகாப்பு துறை தெரிவித்துள்ளது.

பாரம்பரியமாக உளுந்து, அரிசி உள்ளிட்டவையில் தயாரிக்ககூடிய அப்பளத்தை வாங்கி சாப்பிட அறிவுறுத்தியுள்ள உணவு பாதுகாப்பு துறை, குறிப்பிட்ட அளவில் கலர் சேர்க்கப்பட்ட அப்பளங்களை உண்ணலாம் எனவும் தெரிவித்துள்ளது. மேலும், கண்ணை கவரும் கலர் அப்பளத்தை குழந்தைகளுக்கு வாங்கிகொடுக்கவேண்டாம் எனவும் பெற்றோருக்கு உணவு பாதுகாப்புத் துறை அறிவுறுத்தியுள்ளது.

சந்தைகள், சுற்றுலா தலங்கள் மற்றும் பொருட்காட்சிகள் உள்ளிட்ட இடங்களில் கலர் அப்பளம் விற்பனை செய்ய வேண்டாம் எனவும், விதிமுறைகளை மீறி அதிகளவில் கலர் சேர்க்கப்பட்ட அப்பளங்களை விற்பனை செய்யக் கூடாது எனவும் உணவு பாதுகாப்புத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

சமீபத்தில் பஞ்சு மிட்டாய், கோபி மஞ்சூரியன் ஆகிய உணவுகளில் நிறமூட்டுவதற்காக ரோடமின் - பி எனப்படும் செயற்கை நிறமூட்டி சேர்க்கப்படுவதால் புற்றுநோயை உண்டாக்கும் அபாயம் இருப்பதாகக் கூறி, தமிழ்நாட்டில் இவற்றுக்கு உணவு பாதுகாப்பு துறை தடை விதித்தது என்பது குறிப்பிடத்தக்கது.


## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்
DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# நெமிலி மாணவர் விடுதியில் ஆய்வு

## மாணவர்களுக்கு எழுதுபொருட்கள் வழங்கிய இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ந. பிரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாமின் ஒருபகுதியாக, நெமிலி வட்டத்தில்சமூகநீதித்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளி மாணவர்களுக்கான விடுதியில் இன்று (15.07.2026) ஆய்வு மேற்கொண்டார்.



ஆய்வின்போது, விடுதியின் அடிப்படை வசதிகள், மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு, தங்குமிடம் மற்றும் கல்விச் சூழல் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மாணவ ர்களுடன் கலந்துரையாடி அவர்களின்கல்விமுன்னேற்றம் குறித்து விசாரித்து, தொடர்ந்து சிறப்பாகப் படிக்க அறிவுறுத்தினார். இதனைத் தொடர்ந்து, மாணவர்களுக்குநோட்டுப் புத்தகங்கள், பேனா உள்ளிட்ட எழுதுபொருட்களை வழங்கி ஊக்குவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி பேபி இந்திரா, வருவாய் கோட்டாட்சியர் திரு ரமேஷ், மாவட்டசமூகநீதித்துறை அலுவலர் திருமதி பூமா, வட்டாட்சியர் திரு பன்னீர் செல்வம் மற்றும் பல்வேறு அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# விளாப்பாக்கம் டி.எல்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு வகுப்புகள் துவக்கம்

## ஆற்காடு எம்.எல்.ஏ. எஸ்.எம். சுகுமார் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு அடுத்த விளாப்பாக்கம் டி.எல்.ஆர்.கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2026-2027 ஆம் கல்வியாண்டிற்கான முதலாம் ஆண்டு வகுப்புகள் துவக்க விழா நேற்று கோலாகலமாக நடைபெற்றது.

விழாவிற்கு கல்லூரி நிறுவனத் தலைவர் ரவி தலைமை வகித்தார். தமிழ்த்துறை பேராசிரியர் அன்பு முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் கௌதம் வரவேற்புரை ஆற்றினார்.

சிறப்பு விருந்தினராக ஆற்காடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ். எம். சுகுமார் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி முதலாம் ஆண்டு வகுப்புகளைத் தொடங்கி வைத்தார். பின்னர், மாணவ-மாணவிகளுக்கும் அவர்களது பெற்றோருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்து, உயர்கல்வியின் முக்கியத்துவம், ஒழுக்கம், திறன் வளர்ச்சி மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கான தயாரிப்பு குறித்து சிறப்புரையாற்றினார்.


இந்நிகழ்ச்சியில் கல்லூரி அறங்காவலர் சதாசிவம், டபிள்யூ.ஜி. முரளி, ஜெயதேவன், பல்வேறு துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், முதலாம் ஆண்டு மாணவ-மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் கல்லூரி நிர்வாகத்தினர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கும் வகையில் நடைபெற்ற இவ்விழா, புதிய கல்வியாண்டின் தொடக்கத்தைசிறப்பாகக் குறிக்கும் நிகழ்வாக அமைந்தது.



நெல்லைமாவட்டம்காவல்கிணற்றில்பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 124 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு காவல்கிணறு பேருந்து நிறுத்தத்தில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு மு.அப்பாவு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் அதனைத் தொடர்ந்து தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, காவல்கிணறு ஒன்றிய கவுன்சிலர் கொசிஜீன் பால், காவல்கிணறு ஊராட்சி மன்ற தலைவர் இந்திரா சம்பு, மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், காவல்கிணறு காமராஜ் சிலை அமைப்பு குழு தலைவர் உறுப்பினர்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தொளசம்பட்டியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்கக் கோரி ஆட்சியரிடம் மனு



சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தொளசம்பட்டி ஊராட்சியில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வேண்டும் என வலியுறுத்தி அப்பகுதி பொதுமக்கள் சேலம் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

தொளசம்பட்டி ஊராட்சியில் சுமார் 7,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் நெசவாளர்கள் வசித்து வருகின்றனர். மேலும், 2,500-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் உள்ள நிலையில், நான்கு நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இப்பகுதியில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாக இருந்து வருகிறது.

ஆனால், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்இல்லாததால்,விவசாயிகள்பயிர்சாகுபடிக்குத் தேவையான நிதியை தனியாரிடம் அதிக வட்டிக்கு கடன் பெற்று வேளாண் பணிகளை மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, தொளசம்பட்டி ஊராட்சியில் பிள்ளையார் கோவில் அருகே புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, தொளசம்பட்டி பொதுமக்கள் சார்பில் பிரபாகரன் தலைமையில் சேலம் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

# காரிசேரி பஞ்சாயத்தில்

## சில்ரன் சாரிடபிள் டிரஸ்ட் சார்பில் கால்நடைத் தீவன மேம்பாட்டுத் திட்டம் விழிப்புணர்வு



காரிசேரி பஞ்சாயத்தில் சில்ரன் சாரிடபிள் டிரஸ்ட் மூலம் ஒருங்கிணைந்த கால்நடைத் தீவன மேம்பாட்டுத் திட்டம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் சிவகாசி வட்டார நடமாடும் கால்நடை மருத்துவர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பின் அவசியம், சத்தான தீவன வகைகள், சமச்சீர் தீவன மேலாண்மை, கால்நடைகளின் ஆரோக்கிய பராமரிப்பு, நோய் தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தார்.

மேலும், தரமான தீவனங்களை பயன்படுத்துவதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிப்பது, கால்நடைகளின் வளர்ச்சியை மேம்படுத்துவது மற்றும் கால்நடை வளர்ப்பை இலாபகரமான தொழிலாக மாற்றுவது குறித்து பயனுள்ள ஆலோசனை களையும் வழங்கினார்.



ஆலங்குளம் அருகே மருதம்புத்தூரில் கல்வி தந்தை பெருந்தலைவர் காமராஜரின் 124 வது பிறந்த நாளை முன்னிட்டு பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவ சிலைக்கு மருதம்புத்தூர் நாடார் அமைப்பு சார்பில் மாலை அணிவித்து மரியதை செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது இந்த நிகழ்வில்நாடார் அமைப்பு நிர்வாகிகள் ஒன்றிய கவுன்சிலர் வழக்கறிஞர் அரிநாரயணன் மனித உரிமைத்துறை முருகேசன், எஸ் நயினார் நாடார், நாட்டாமைசிவசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர்சேர்மன்ராஜா, களக்குட்டி, எஸ்எஸ்பாஸ்கர் ராமசந்தின், டி.ஆர். ராஜன், பிரேம், ராமசந்திரன், பால்பாண்டி நாரயணன், நாடார் உள்பட பலர் கலந்து கொண்டனர்

# புகார் அளிப்பதற்கு கட்டணமில்லா தொலைபேசி எண் அறிவிக்க தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு கோரிக்கை



ஈரோடு மாவட்டத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு கைத்தறி மற்றும் கதர் துறைஅமைச்சர்ம.விஜய பாலாஜியை நேரில் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை வழங்கியுள்ளது. அந்தக் கோரிக்கை மனுவில், தமிழகத்தில் அழிவின் விளிம்பில் இருக்கும் விசைத்தறி தொழிலையும், நெசவாளர்களின் வாழ்வாதாரத்தையும்மீட்டெடுக்கும் வகையில், 2027ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான வேஷ்டி, சேலை உற்பத்திக்கு அரசாணை வெளியிட்டு, முதற்கட்டமாக ரூ.300 கோடியை விடுக்க வழிவகைசெய்ததமிழகஅரசுக்கும், கைத்தறி துறை அமைச்சருக்கும் நெசவாளர்கள் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஆண்டு இருப்பு வைக்கப்பட்ட வேஷ்டி,சேலைகளை இந்த ஆண்டு துவக்க இருப்பாக எடுத்துக்கொள்ளாமல்,எதிர்வரும் தீபாவளி பண்டிகையின்போதுமுதியோர் ஒய்வூதிய திட்ட பயனாளிகளுக்கு வழங்க ஏற்பாடுசெய்திருப்பதுநெசவாளர்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் என்றாலும், இதுவரை நடைமுறையில் இருந்த அளவான 1.77 லட்சம் வேஷ்டி, சேலைகள் மட்டுமே உற்பத்தி செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. காலச் சூழல் குறைவாகஉள்ளநிலையைக் கருத்தில் கொள்ளாமல், அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும் வேஷ்டி, சேலை வழங்கிட வழிவகை செய்து, விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து ஆறு மாத கால வேலைவாய்ப்பு கிடைக்க அரசு ஆவண செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

அதுமட்டுமின்றி,இதுவரை பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்பட்ட வேஷ்டியின் அளவு 3.75 மீட்டராக இருந்த நிலையில், இந்த ஆண்டு உற்பத்தி செய்யப்படும் வேஷ்டியின் அளவு 2 மீட்டராகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் 2 மீட்டருக்கு ஒரு முறை குறி கட்ட வேண்டிய சூழல் ஏற்படுவதால்உற்பத்தி குறையும் என்பதால், இன்றைய செலவினங்களுக்குத் தகுந்தவாறு ஒரு வேஷ்டி உற்பத்திக்கு குறைந்தபட்சம் ரூ.20 கூலியாக நிர்ணயம் செய்து வழங்க வேண்டும் என்றும், அரசு வழங்கும் இந்தக் கூலி விசைத்தறி நெசவாளர்களுக்கு முழுமையாகச் சென்றடைகிறதா என்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளனர். கூலி குறைவாகப் பெறுபவர்கள் உடனடியாகப் புகார் அளிக்கும் வகையில் கட்டணமில்லா தொலைபேசி எண் (Toll-Free Number) வசதியை அரசு அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

எனவே, வேஷ்டி உற்பத்திக்கான கூலி உயர்வு குறித்த அறிவிப்பும், வேஷ்டி-சேலை உற்பத்திக்காகத் தமிழ்நாடு அரசு வழங்கும் கூலியைக் குறைவாகப் பெறுபவர்கள் கைத்தறித்துறை நிர்வாகத்திற்குப் புகார் அளிக்கக் கட்டணமில்லா தொலைபேசி எண் குறித்த அறிவிப்பும் விரைவில் வெளிவருமா என்ற எதிர்பார்ப்பில், முழு உற்பத்தியும் முழு கூலியும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு காத்துக் கொண்டிருக்கிறது.

# பணகுடி, வள்ளியூரில் காமராஜரின் 124வது பிறந்த நாள் விழா

## மாவட்ட செயலாளர் கிரகாம் பெல் மரியாதை



நெல்லை மாவட்டம் பணகுடி, வள்ளியூரில் கல்வித் தந்தை பெருந்தலைவர் கு.காமராஜர்

அவரது 124 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு...

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் ம. கிரகாம்பெல் தலைமையில் பணகுடி பேருந்து நிலையத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவ படத்திற்கும், வள்ளியூரில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவ சிலைக்கும் திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.இதில் வள்ளியூர் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம், பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன், பணகுடி பேரூராட்சி மன்றத் தலைவர் தனலெட்சுமி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மாடசாமி, அறங்காவலர்குழு தலைவர் அசோக்குமார், அவைத் தலைவர்கள் அன்பரசு, மாடசாமி பேரூர் கழக துணைச் செயலாளர்கள் ஜான்சி ராஜம், ஜெயராஜ், மல்லிகா, குமரகுரு பண்ணையார், திமுக நிர்வாகிகள் ஆச்சூர் ராமசாமி ,காதர் மைதீன், தில்லை ராஜா, வழக்கறிஞர் சுப்பிரமணி, சுரேஷ், சுரேஷ் பாக்கியம், சிவா, ராஜேஸ்வரி, ஐயப்பன் , ஹரிதாஸ், வசுமதி, அன்னம்மாள், கவுன்சிலர்கள் கார்த்திக் சுபாஷ், ஆபிரகாம், ஆனந்தி ராஜேஷ், மாணிக்கம், ஆஷா, ஜெயராம், சுடலையாண்டி, கோபால் , சின்னத்துரை , போஸ்கோ, முருகன், பெருமாள், பூபதி ராஜன், லெட்சுமணன், தாமஸ்குமார், வெற்றி வேல், எட்வின், கண்மணி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கோவை இராமநாதபுரம் பகுதியில் செயல்பட்டு வரும் சில்க் வில்லேஜ் கைத்தறி ஆராய்ச்சி மையத்தில்

## எஸ்.எஸ்.வி.எம் கல்வி குழுமத்தைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கு , சுமார் 20க்கும் மேற்பட்டோர் பள்ளி ஆசிரியர்களுடன் ஒரு நாள் பயிற்சி மேற்கொண்டனர்



கோவை இராமநாதபுரம் பகுதியில் சில்க் வில்லேஜ் கைத்தறி ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது.

இங்கு எஸ்.எஸ்.வி.எம் கல்வி குழுமத்தைச் சேர்ந்த பள்ளி மாணவ மாணவியர்கள், சுமார் 20க்கும் மேற்பட்டோர், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுடன், சில்க் வில்லேஜ் மையத்தில் ஒரு நாள் களப்பணிக்காக வந்திருந்தனர், அப்பொழுது அங்கு நெய்யப்படும் ஆடைகள், அதன் நுட்பங்கள், பழமை மாறா தறிகள், அவற்றின் செயல்பாடுகள் குறித்து, குறிப்புகள் எடுத்து கொண்டனர் மேலும் இயந்திரங்களை விட கைகளினால் நெய்யப்படும் ஆடைகளின் உழைப்பு, அதன் உறுதி தன்மை, வேலைப்பாடுகள், நுனுக்கங்களை நேரடியாக கேட்டறிந்தனர் மேலும், கைத்தறி, நேச்சுரல் டையிங், ஜக்கா டிசைனிங் குறித்த தொழில்நுட்ப சந்தேகங்களையும் ஒருவருக்குபின் ஒருவராக கேட்டு அறிந்து கொண்டனர்,இந்நிகழ்ச்சியில்சில்க்வில்லேஜ் கைத்தறி ஆராய்ச்சி மைய நிறுவனர் கைத்தறி முருகேசன், மற்றும் எஸ்.எஸ்.விஎம் பள்ளி குழும முதன்மை செயல் அதிகாரி மாயா ஜார்ஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மேலும் இது குறித்து சில்க் வில்லேஜ் கைத்தறி ஆராய்ச்சி நிறுவனத்தின் நிறுவனர் முருகேசன் கூறியதாவது..

இன்றைய நவீன தலைமுறைகளுக்கு கைத்தறி ஆடைகள் என்பது கண்காட்சியில் கானும் வரு பொருளாக மட்டுமே உள்ளது. ஆனால் இத்துறையில் உள்ள வேலைப்பாடுகள், நழினங்கள் குறித்து தெரிய வைப்பது நமது கடமையாக உள்ளது. எனவே இது மாதிரியான பள்ளி மாணவ மாணவிகள் இங்கு வந்து பயிற்சி மெள்வது இத்துறையை மீட்டெடுக்கும் ஒரு யுக்தியாகும், வருங்கால சந்ததியினருக்கு இத்தகைய செயல் அவர்களின் கல்வி முறைக்கு மட்டுமின்றி, இத்துறையின் வளர்ச்சிக்கும் விதையாக அமையும் எனநம்புவதாகதெரிவித்தார்என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்காசியில் நடைபெற்ற யோகா உலக சாதனை நிகழ்ச்சி வல்லம் மாணவன் பிரவீண்குமார் மூன்றாவது உலக சாதனை



தென்காசி மாவட்டம், தென்காசியில் உள்ள எம்.கே.வி.கே.பள்ளியில் நடைபெற்ற யோகா உலக சாதனை நிகழ்ச்சியில், வல்லம் பகுதியைச் சேர்ந்த மாணவன் பிரவீண்குமார் பங்கேற்று உலக சாதனை படைத்தார். பிரவீண்குமார் ஏற்கனவே இரண்டு முறை யோகா உலக சாதனை படைத்துள்ளார். தற்போது நிகழ்த்தியுள்ள இந்த சாதனை அவருக்கு மூன்றாவது உலக சாதனையாகும்.

மேலும், மாவட்ட மற்றும் மாநில அளவிலான பல்வேறு யோகா போட்டிகளில்கலந்துகொண்டு பல வெற்றி களைப் பெற்று, ஏராளமான விருதுகளையும் பெற்றுள்ளார்.

## சிறை கைதி சபரிவர்மனின் மரணத்திற்கு மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி தலைவர் காயல் அப்பாஸ் கடும் கண்டனம்





சிறை கைதி சபரிவர்மனின் மரணத்திற்கு மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி தலைவர் காயல் அப்பாஸ் கடும் கண்டனத்தை தெரிவித்து உள்ளார் இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது.

நாகர்கோவில் சிறையில் விசாரணைக் கைதியாக அடைக்கப்பட்டிருந்த சபரிவர்மன் உயிரிழந்த சம்பவத்தை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி மிகவும் வண்மையாக கண்டிக்கிறது .மேலுமசிறைக்குள் சபரிவர்மனின் உடலில்19 இடங்களில் காயம் ஏற்பட்டு மரணம் அடைந்ததாக செய்திகள் வெளியாகி வருகின்றன. சிறைக்குள் கைதிகளை பாதுகாக்க கூடிய சிறை காவலர்களே கைதி சபரிவர்மன் உடல் ஊன முற்றோர் என்றும் பார்க்காமல் இவ்வுறக்கமின்றி மிகவும் கொடூரமான முறையில் தாக்கி கொலை செய்த சிறைகாவல ர்களின் இத்தகை செயலை கண்டிக்கிறோம். சபரிவர்மனை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்களையும் அனுதாபங்களையும் தெரிவித்து கொள்கிறோம்.மேலும்சபரிவர்மனின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் ரூ 50 லட்சமும் தமிழக அரசு வழங்க வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி சார்பாக கேட்டு கொள்கிறோம். மேலும் . சபரிவர்மன் மரணத்திற்கு காரணமான மூன்று சிறைக்காவலர்களை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவின் பெயரில் கைது செய்திருப்பது வரவேற்க்க தக்கது. எனவே : சபரிவர்மன் மரணத்தில் யார் காரமானவர்கள் என்று துரித விசாரணைமேற்கொள்ள வேண்டும் .இனி வரும் காலங்களில் காவல் மரணங்கள் நடை பெறாமல் தடுக்க தமிழக முதல்வர் ஜோசப் விஜய் உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி சார்பாக கேட்டு கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.

## வள்ளியூரில் காமராஜரின் பிறந்த நாள் விழா தேமுதிக சார்பில் மாலை அணிவித்து மரியாதை



நெல்லை மாவட்டம் வள்ளியூரில் தேமுதிக சார்பில் கல்வித் தந்தை பெருந் தலைவர் காமராஜர் அவரது 124வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு வள்ளியூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜான் டேவிட் தலைமையில் மாவட்ட கழக துணை செயலாளர் யோசேப்பு முன்னிலையில் மாவட்ட கழக செயலாளர் விஜி வேலாயுதம் கலந்து கொண்டு மாலை அணிவித்துமரியாதைசெலுத்தினர் இந்நிகழ்ச்சியில் மாநில விவசாயி துணை செயலாளர் ராமச்சந்திரன், மாவட்ட கழக பொருளாளர் வழக்கறிஞர் ஆல்வின் ராஜா டேவிட்,வள்ளியூர்தெற்கு ஒன்றிய செயலாளர் வெள்ளத்துரை, ராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் இசக்கிமுத்து,மாவட்ட இளைஞரணி செயலாளர் வசந்த ராஜா, மாநில பொதுக்குழு உறுப்பினர் பாபு, வள்ளியூர் ஒன்றிய மகளிரணி துணைச் செயலாளர் சுமித்ரா. மாவட்ட தொண்டரணி துணைச் செயலாளர் தியாகராஜன் நிர்வாகிகள் கண்ணன்,அன்பு ரவி சுயம்பு ராஜன் பாலச்சந்தர் உமேஷ் ராஜன் அன்பழகன் வள்ளியூர் பேரூர் கழக அவைத்தலைவர் கனகராஜ் துணைச் செயலாளர் முருகன் அருணாச்சலம் மற்றும் ஏராளமான தேமுதிக கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## வேப்பூர் வட்டத்தில் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு



கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் அரசு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.பி. ஆதித்யா செந்தில் குமார் வியாழக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேமாத்தூர் அருகே மணிமுக்தாற்றின் இடைப்பட்ட பகுதியில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நடைபெற்று வரும் பாலம் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்து, பணிகளை தரமாகவும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிறைவு செய்யவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, வேப்பூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.1 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள நவீன கூடைப்பந்து மைதானத்தை பார்வையிட்டு, மாணவர்களுக்கு உருவாக்கப்பட்டுள்ள விளையாட்டு வசதிகளை ஆய்வு செய்ததுடன், பராமரிப்பு பணிகளையும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

மேலும், தே.புடையூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் நடைபெற்று வரும் குடிநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, வரம்பனூர் ஊராட்சியில் நடைபெற்ற மக்கள் குறைதீர் முகாமில் கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறைஅலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், அப்பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலை உறுதியளிப்பு திட்டப் பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பயனாளிகளிடம் திட்ட செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது விருத்தாச்சலம் கோட்டாட்சியர் விஷ்ணு பிரியா, வேப்பூர் வருவாய் வட்டாட்சியர் ராமர், நல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கொளஞ்சி (கி,ஊ), செல்வவிநாயகசாமி மற்றும் பல்வேறு துறை அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.



## தென்காசி மாவட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் ஆய்வு பணிகளை மேற்கொண்டார்

தமிழக வெற்றிக் கழகம் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் முதன்முறை யாக தென்காசி மாவட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் அதிரடி ஆய்வு பணிகளை மேற்கொண்டார்.

இதன்படி கள ஆய்வுக்காககடையநல்லூர்வட்டம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள நியாய விலைக்கடைகள், அரசு பள்ளிகள், சுகாதார நிலையங்கள், அம்மா உணவகம் பேருந்து நிலையம்சார்பதிவாளர் அலுவலகம் ஒழுங்குமுறை விற்பனை கூடம் நான்கு வழி சலை நிலை எடுப்புதனிவட்டாட்சியர் அலுவலகம் உள்ளிட்டவைகளில் ஆட்சியர் சோதனை நடத்தினார்.

புளியங்குடியில்நியாய விலைக்கடைகளில் ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர்,அங்குதரமான பொருட்கள் பொதுமக்களுக்குவழங்கப்படுவதை உறுதி செய்ததுடன், பணியாளர்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து கடையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது, மாணவர்களுக்கு தேவையான கூடுதல் வசதிகளை கேட்டறிந்த ஆட்சியர், அவர்களுக்கான கல்வி ஆலோசனைகளையும் வழங்கினார்.

தொடர்ந்து சொக்கம்பட்டியில் சுகாதார ஆய்வகம், கடையநல்லூரில் பேருந்து நிலையம் வாகன காப்பகம் கழிப்பிடம் குழந்தைகள் பால் ஊட்டும் வரை சமூகநீதி மாணவியர் விடுதி சார் பதிவாளர் அலுவலகம்குழந்தைகள் மையம் உள்ளிட்ட இடங்களிலும் ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் ஆய்வு மேற்கொண்டார். கடையநல்லூர் பேருந்து நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் செயல்படாமல் இருப்பதை ஆய்வு என்பது கண்டறிந்து நகராட்சி அதிகாரிகளை உடனடியாக இவை சரி செய்ய வேண்டும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு செயல்படுத்த வேண்டுமென உத்தரவிட்டார் ஆட்சியரின் இந்த நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.

## கர்மவீரர் காமராஜர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு த.வெ.க. சார்பில் 200 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

பெருந்தலைவர் காமராஜரின் 124–ஆவது பிறந்தநாளைமுன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள்வழங்கும்நிகழ்ச்சி தூத்துக்குடி மாவட்டம் முத்தையாபுரம் பல்க் அழைப்பாளராக கலந்து கொண்டு, தூத்துக்குடி மாவட்டம் தமிழக வெற்றி கழகம் சார்பில் 200 பேருக்கு இலவச சேலைகளையும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் உள்ளிட்ட கல்வி உபகரணங்களையும் வழங்கினார்.



பஜாரில் நடைபெற்றது.


நிகழ்ச்சியில், தமிழக வெற்றி கழகத்தின் முதலமைச்சர் ச.ஜோசப் விஜயின் அறிவுறுத்தலின்படி, கழக பொதுச்செயலாளரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஆனந்த் வழிகாட்டுதலின்படியும், சட்டமன்ற உறுப்பினரும் மீன்வளத்துறை அமைச்சருமான ஸ்ரீநாத் உத்தரவின்படியும் தூத்துக்குடி மத்திய மாவட்டச் செயலாளர் எஸ்.டி.ஆர். சாமுவேல் ராஜ் சிறப்பு

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தூத்துக்குடி மத்திய மாவட்ட தெற்கு பகுதி செயலாளர் என்றும் தளபதி வழியில் ஆ. இசக்கிமுத்து செய்திருந்தார்.

நிகழ்ச்சியில் தெற்கு பகுதி இணைச் செயலாளர் சிங்காரவேல்,தெற்கு பகுதி பொருளாளர் ஆனந்தராஜ், தெற்கு பகுதி துணைச் செயலாளர்தேவேந்திரன்,தெற்கு பகுதி செயற்குழு உறுப்பினர்கள் முருகன், குமார், கனகராஜ், சரவணகுமார், சுயம்புலிங்கம், அஜீஸ், அபிஷேக், கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும்,52–வது வார்டு வட்டச் செயலாளர் தினேஷ்பாபு, 54–வது வார்டு வட்டச் செயலாளர்வெங்கடேஷ்,60–வது வார்டு வட்டச் செயலாளர் ரொமான்ஸ் உள்ளிட்ட மகாராஜன், பொன்ராஜ், பிரபா, ராஜேஷ்குமார், சந்தோஷ், சேக், பால்ராஜ், சந்தனராஜ் மற்றும் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## YiFi 2026 தேசிய நிதி தொழில்முனைவோர் உச்சிமாநாடு ஜூலை 17 முதல் தொடக்கம்




இந்திய தொழில் கூட்டமைப்பு(CII),யங் இந்தியன்ஸ் (Yi) மற்றும் ONE Bharat அமைப்புகள் இணைந்து நடத்தும் தேசிய நிதி தொழில்முனைவோர் உச்சிமாநாடு – "YiFi 2026" ஜூலை 17 முதல் மதுரையில் நடைபெறுகிறது.

இரண்டு நாள் நடைபெறும் இந்த மாநாட்டில் நாடு முழுவதிலுமிருந்து சுமார் 600 தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள், நிதி நிபுணர்கள் மற்றும் தொழில் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர். புதிய தொழில் முயற்சிகளுக்கான முதலீட்டு வாய்ப்புகள், நிதி ஆதாரங்கள், தொழில்நுட்ப வளர்ச்சி, புதுமை மற்றும் தொழில் மேம்பாடு தொடர்பான பல்வேறு அமர்வுகள் நடைபெறவுள்ளன.

மாநாட்டில் முன்னணி தொழில்துறை வல்லுநர்கள், வெற்றிகரமான தொழில்முனைவோர் மற்றும் முதலீட்டாளர்கள் உரையாற்ற உள்ளனர். தொழில்முனைவோருக்கு தேவையான நிதி மேலாண்மை, முதலீடு ஈர்த்தல், நிறுவன வளர்ச்சி உள்ளிட்ட தலைப்புகளில் கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

யங் இந்தியன்ஸ் நிர்வாகிகள் கூறுகையில், "புதிய தலைமுறை தொழில்முனைவோரை ஊக்குவித்து, உலகளாவிய அளவில் போட்டியிடும் திறனை உருவாக்குவதேYiFi2026மாநாட்டின் நோக்கம்" என்றனர்.

இந்த மாநாடு தொழில் துறையில் புதிய வாய்ப்புகளை உருவாக்குவதோடு, தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் முக்கிய நிகழ்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஸ்ரீரெகுநாதபுரம்,நதிப்பாறை,ரோஸ்மியாபுரத்தில் முன்னாள் முதல்வர் காமராஜரின் பிறந்த நாள் விழா





நெல்லை மாவட்டம் ஸ்ரீ ரெகுநாதபுரம், நதிப்பாறை, ரோஸ்மியாபுரம் ஊர் பொதுமக்கள் சார்பில் முன்னாள் முதல்வர் கல்வி கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் 124–வது பிறந்த நாளையொட்டி இளவட்டக்கல்தூக்கும்விழாமிகவும் சிறப்பாக நடைபெற்றது இவ்விழாவில் சிறந்த இரத்த தான சேவைக்கான காமராஜர் விருதினை உயிர்நாடி அறக்கட்டளை நிறுவனர் தலைவர் சேவரத்னா முனைவர் ம.வைகுண்டமணி மற்றும் சிறந்த பசுமை சேவை சிறப்பாக செயல்பட்டமைக்காக இயற்கை வனம் அறக்கட்டளை நிறுவனர் தலைவர் சேவைச்செம்மல்.முனைவர்.பிரபாகரனுக்கும்விழா கமிட்டினர் சார்பில் வழங்கிய விருதினை ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கே கிறிஸ்டோபர் அவர்கள் வழங்கி பாராட்டினார்.



கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் உட்கோட்டத்தில் புதிய டி.எஸ்.பிஆக சங்கர் கணேஷ் பெறுப்பேற்றுக் கொண்டார்

## பெருந்துறையில் விசிக ஆலோசனைக் கூட்டம்: ஆகஸ்ட் 18 திருப்பூர் மண்டல செயற்குழு கூட்டத்திற்கு திரளாக பங்கேற்க தீர்மானம்



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்பி., பிறந்தநாளையொட்டி ஆகஸ்ட் 17ஆம் தேதி உளுந்தூர்பேட்டையில் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு நடைபெற உள்ளது. இதனைத் தொடர்ந்து, வருகின்ற 18ஆம் தேதி திருப்பூர் லட்சுமி திருமண மண்டபத்தில் எழுச்சித்தமிழர் தலைமையில் மேற்குமண்டலசெயற்குழுகூட்டம்மிகபிரமாண்டமாக நடைபெற இருக்கிறது. இக்கூட்டத்தை எவ்வாறு சிறப்பு செய்ய வேண்டும், பொதுமக்களை எவ்வாறு பெருந்திரளாக அழைத்துச் செல்ல வேண்டும் என்பது குறித்தஆலோசனைக்கூட்டம்பெருந்துறைசட்டமன்றத் தொகுதி மாவட்ட தலைமை அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் வி.விஜயபாலன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பெருந்துறை சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். இதில் பெருந்துறை மாவட்ட துணை செயலாளர்கள் சி.அண்ணாமலை, மு. கிருஷ்ணமூர்த்தி,கே.ஜெயக்குமார்,ஜெ.கவிதா,ஜெனிபர் ரோஸ்மின் மேரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கே. அமுதா, R.ராஜேஷ்குமார், மகளிர் விடுதலை இயக்க மாவட்ட செயலாளர் ஆ.சுபாஷினி, இளஞ்சிறுத்தைகள் எழுச்சி பாசறை மாவட்ட செயலாளர்கள் அ. மணிகண்டன், D.நந்தினி, பெருந்துறை ஒன்றிய செயலாளர் (கிழக்கு) அ.ஜெகதீசன், பெருந்துறை நகர செயலாளர் மு.முருகசாமி,கிழக்குபெருந்துறைஒன்றிய பொருளாளர் ரா.ஜீவா, பெருந்துறை ஒன்றிய துணை செயலாளர் சௌந்தர், பெருந்துறை ஒன்றிய பொருளாளர் E.தனலட்சுமி, கிறிஸ்துவ சமூக நீதி பேரவை ஒன்றிய செயலாளர் செ.தீமோத்தேயு, பெருந்துறை ஒன்றிய செயலாளர் (வடக்கு) ச.குமார், சென்னிமலை நகர செயலாளர் விஜயா மற்றும் சென்னிமலை ஒன்றிய செயலாளர் ஜெபராஜ் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் அனைவரும் பொறுப்புடன் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



ஈரோடு மாவட்டம் தாளவாடி ஒன்றியம், அரேப்பாளையம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சத்துணவு கூடத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி சாப்பிட்டு பார்த்து நேற்று (16072026 ) ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், தாளவாடி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் நடைபெற்ற சிறப்பு முகாமில் பயனாளிகளுக்கு பிறப்புச்சான்றிதழை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (15.07.2026) அன்று வழங்கினார்.



ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், ஆசனூர் ஊராட்சி, ஓங்கல்வாடி பகுதியில் தூய்மைப்பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து குப்பைகளை சேகரிக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (16.07.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

# லாக் அப் மரணத்தால் அதிமுக ஆட்சியை இழக்க நேரிட்டதை தவெக அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்

## தென்காசியில் மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாகிருல்லா பேட்டி

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் மனித நேய மக்கள் கட்சி மற்றும் தமுமுக அமைப்பின் தலைமை செயற்குழு கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் கட்சியின் தலைவரும் நாகை சட்டமன்ற உறுப்பினருமான ஜவாஹிருல்லா



கலந்து கொண்டு, நிகழ்ச்சியில் பேருரையாற்றினார். பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது–

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் சபரி வர்மன் என்ற மாற்றுத் திறனாளி காவல் நிலையத்தில் சித்திரவதை செய்யப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இது ஒரு சிறை மரணமாக இந்த ஆட்சியில் நடைபெற்ற கூடிய ஒரு துயர சம்பவமாகும்.

அவர் நல்ல நிலையில் லாக்கப்பில் இருக்கக்கூடிய காட்சிகள் வெளிவந்திருக்கின்றன. என்ன குற்றம் செய்தாலும் அதற்கு தண்டனை வழங்க கூடிய அதிகாரம் நீதிமன்றத்துக்கு தான் இருக்கிறது. காவல்துறையினரே தண்டனையை நிறைவேற்றக்கூடிய அதிகாரத்தை பெற்றால் அதை மிகப்பெரிய மனித உரிமை மீறலாக ஜனநாயக அரசமைப்பு சட்டவிரோத நடவடிக்கையாக மாறிவிடும்.

சென்ற அதிமுக ஆட்சியில் சாத்தான்குளம் தந்தையும் மகனும் இது போன்ற ஒரு காவல்துறை பிடியில் சித்திரவதை செய்யப்பட்டு உயிரிழந்தனர். அது அதிமுக ஆட்சி பறி போனதற்கு காரணமாக அமைந்தது.

அதே கஸ்டடியில் டெத் இந்த ஆட்சியிலும் தொடர்வது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல. இது குறித்து உரிய விசாரணை நடத்தி இதற்கு காரணமான காவல் அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாங்கள் திமுக கூட்டணியில் தொடர்ந்து உறுதியாக பயணித்து வருகிறோம்.

திமுக கூட்டணியின் சார்பாக தான் வரவிருக்கும் இடைத்தேர்தல்கள் அடுத்து வரவிருக்கும் தேர்தல்களில் நாங்கள் இடம் பெறுவோம்.

தமிழக வெற்றிக்கழக அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள ஒரு சிலரை தவிர்த்து மற்ற அனைவருமே புதியவர்கள்.

எனவே அக்கட்சியின் ஆட்சி முறை குறித்து உடனடியாக குறை சொல்வது என்பது ஏற்கக் கூடியதாக இருக்காது.

குற்றங்களை தடுக்க கூடிய வகையில் நடவடிக்கைகள் கடுமையாக எடுக்க வேண்டும் குற்றங்கள் குறித்து விரைந்து விசாரணை நடத்துவதற்காக விரைவு நீதிமன்றங்களை இந்த அரசு அமைக்க வேண்டும் என்று தான் கோரிக்கை வைத்ததாகவும், அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. பாலியல் குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

தென்காசி மாவட்ட நிர்வாகிகள் மாவட்டத் தலைவர் நயினார் முஹம்மது மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் சலீம் தமுமுக மாவட்ட செயலாளர் அப்துல் ரகுமான் மாவட்ட பொருளாளர் முகமது பாசித் மற்றும் தமுமுக மாநில தொண்டர் அணி துணை செயலாளர் கோகோ அலி தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொட்டல் மீரான் முகம்மது அலி, பசீர் ஒலி பீர்மைதீன், செய்யது அலி

மாவட்ட துணை செயலாளர்கள் பொட்டல் சித்திக், மஜித் முகப்பிலாஷா செய்யது மதுது, திவான் ஆகியோர்கள் களந்து கொண்டனர்



ஈரோடு மாவட்டம், தாளவாடி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் நடைபெற்ற சிறப்பு முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (15.07.2026) பெற்று குறைகளை கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், தாளவாடி சமூகநீதி பள்ளி மாணவர்கள் விடுதியில் மாணவர்களின் புத்தகங்கள் வாசிப்புத்திறன் மற்றும் கற்றல் திறன் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (16.07.2026) ஆய்வு மேற்கொண்டார்.

# கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள சுகுணா கல்யாண மண்டபத்தில், கிராப்ட் கவுன்சில் ஆஃப் தமிழ்நாடு சார்பில் "கிராப்ட் பஜார் 2026" எனும் கைவினைப் பொருட்களின் கண்காட்சி மற்றும் விற்பனையின் துவக்க விழா

கிராப்ட் கவுன்சில் ஆஃப் தமிழ்நாடு சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் கைவினைப் பொருட்கள் கண்காட்சி, தயாரிப்பாளர்கள் தங்களது படைப்புகளை காட்சிப்படுத்தி நேரடியாக விற்பனை செய்து வருகின்றனர். தமிழ்நாடு–ன் முக்கிய நிகழ்வாக நடைபெறும் இந்த கிராப்ட் பஜார், ஒரே இடத்தில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்க–



கிராப்ட்பஜார் 2026 எனும் தலைப்பில் இந்த ஆண்டுக்கான கண்காட்சி மற்றும் விற்பனை, ஜூலை 16ம் தேதி துவங்கியது, கோவை, அவினாசி சாலை நவ இந்தியா பகுதியில் உள்ள, சுகுணா கல்யாண மண்டபத்தில் துவங்கிய இக்கண்காட்சி ஜூலை 21ம் தேதி, வரை 6 நாட்கள் நடைபெற உள்ளது. இந்தக் கண்காட்சியில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கைவினைக் கலைஞர்கள், நெசவாளர்கள் மற்றும் பாரம்பரிய கலைப் பொருட்கள்

1988–ஆம் ஆண்டு கோவையில் தொடங்கப்பட்ட கிராப்ட் கவுன்சில் ஆஃப் தமிழ்நாடு அமைப்பின் முக்கிய நோக்கம், தமிழகம் மற்றும் இந்தியாவின் பாரம்பரிய கைவினைக் கலைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதாகும். இதன் ஒரு பகுதியாக கைவினைக் கலைஞர்களுக்கு வடிவமைப்பு மேம்பாடு, பொதியிடல், சந்தைப்படுத்தல் உள்ளிட்ட துறைகளில் அமைப்பு தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகிறது.

கிராப்ட் கவுன்சில் ஆஃப்

ளைச் சேர்ந்த திறன்மிக்க கைவினைக் கலைஞர்கள், நெசவாளர்கள் மற்றும் கலைப் பொருட்கள் தயாரிப்பாளர்கள் பொதுமக்களை நேரடியாக சந்தித்து பொருட்களை விற்கும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது. இதன் மூலம் கலைஞர்களுக்கு புதிய தயாரிப்புகள், வடிவமைப்பு, விலை நிர்ணயம் மற்றும் சந்தைத் தேவைகள் குறித்த கருத்துகளைப் பெறுவதுடன், நிலையான வாழ்வாதாரத்திற்கும் வழிவகுக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவையில் வாடிக்கையாளர்கள் எதிர்பார்த்து காத்திருந்த, ஆடி அதிரடி யூஸ்டு கார் சேல் திருவிழா

## கார்ஸ் 327 நிறுவனம் ஜூலை 16ம் தேதி முதல், 20ம் தேதிவரை நடைபெற உள்ளது.



கார்ஸ் 327 நிறுவனத்தின் சார்பில் "ஆடி அதிரடி" "யூஸ்டு கார் சேல் திருவிழா " ஜூலை 16ம் தேதி, துவங்கி 20ம் தேதி வரை, தொடர்ந்து 5 நாட்கள் கோவை சிங்காநல்லூர் வெங்கட லட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. இதுகுறித்து "கார்ஸ் 327" உரிமையாளர் விஷ்ணு வேணுகோபால் பத்திரிகையாளர்களை சந்தித்து கூறியதாவது..,

பொதுமக்கள் ஆடி தள்ளுபடி விற்பனையை எதிர்பார்த்து காத்திருந்தனர். அவ்வாறு காத்திருந்த வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், இக்கண்காட்சி ஆடி மாதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இக்கண்காட்சியில் 300க்கும் மேற்பட்ட தரமான யூஸ்டு கார்கள் இருப்பதாகவும், யூஸ்டு கார்கள் தேவைப்படுபவர்களுக்கு உடனடியாக பைனான்ஸ் ஏற்பாடு செய்து தருவதாகும், வங்கி கடன் உதவி மற்றும் தனியார் கடனுதவி உடனுக்குடன் செய்து கொடுப்பதாகவும், வாகனங்களுக்கு இன்சூரன்ஸ், சர்வீஸ் உள்ளிட்ட அனைத்தும் உடனடியாக செய்து கொடுப்பதாகவும், ரூபாய் ஒரு லட்சம் முதல் 50 லட்சம் ரூபாய் வரை கார்கள் இந்த கண்காட்சியில் இடம் பெற்று இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் வாடிக்கையாளர்கள் யூஸ்ட் கார்களை வாங்கும் பொழுது நல்ல ஒரு, கார் மெக்கானிக்கை அழைத்து வந்து அவரின் பார்வையில் ஓட்டி பார்த்து, நன்கு சோதனை செய்து பின்னர் பெற்று கொள்ளுவது நல்லது, இது வாடிக்கையாளர்களுக்கும், எங்களுக்கும் இடையே உள்ள நல்ல உறவை நீட்டிக்கும் என்றார். மேலும் வாடிக்கையாளர்களின் பழைய கார்கள் எந்த நிலையில் இருந்தாலும் அதனை நல்ல முறையில், ஆய்வு செய்து நல்ல விலைக்கு, எக்ஸ்சேஞ் முறையில் பெற்றுகொள்ளவும் இங்கு ஏற்பாடுகள் செய்யபட்டுள்ளது எனவே வாடிக்கையாளர்கள் இந்த வாய்ப்பை தவறவிட்டு விட வேண்டாம் என்று கேட்டு கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவை பாப்பநாயக்கன் பாளையத்தில் உள்ள தி ரெசிடென்சி உணவகத்தில்,

## கலாஷா ஃபைன் ஜூவல்ஸ்ன் பிரத்யேக கைவினை நகைக் கண்காட்சி தொடக்கப்பட்டது

தென்னிந்தியாவின் மிகப்பெரிய கேப்ஸ் கோல்ட் நிறுவனத்தின் அங்கமாக செயல்படும் கலாஷா ஃபைன் ஜுவல்ஸ், கைவினை நுணுக்கத்தில் உருவாக்கப்பட்ட விழாக்கால மற்றும் மணமகள் நகைத் தொகுப்புகளை அறிமுகப்படுத்தும் பிரத்யேக நகைக் கண்காட்சியை கோவையில் இன்று தொடங்கியது. அபர்ணா சுங்கு தேர்ந்தெடுத்து வடிவமைத்துள்ள இக்கண்காட்சி ஜூலை 16, 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் அவிநாசி சாலையில்



உள்ள தி ரெசிடென்சி டவர்ஸ் ஹோட்டலில் நடைபெறுகிறது.

கண்காட்சியை கலாஷா ஃபைன் ஜுவல்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் ஸ்ரவண் குமார் குடூர் தொடங்கி வைத்தார். தொடக்க விழாவில் நகை ஆர்வலர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர். மேலும், சி.என்.வி. டெக்ஸ்டைல்ஸ், வெள்ளியங்கிரி ஆண்டவர் டெக்ஸ்டைல்ஸ் மற்றும் ஸ்ரீ விவேகானந்தா கல்வி நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் பத்மினி ராமமூர்த்தி, கௌமாரம் பிரசாந்தி அகாடமியின் நிறுவனர் தீபா மோகன்ராஜ், ஆஷா ராஜ்குமார், பிரிட்ஜ்வுட் குழுமப் பள்ளிகளின் நிறுவனர் வித்யாபிரபா, பிராட்வே மெகாப்ளெக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த சங்கீதா சதீஷ் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும் விழாவில் பங்கேற்றனர். இந்தக் கண்காட்சியில் தங்கம், வைரம், போல்கி, ஜடாவ், கோயில் நகைகள் மற்றும் பழமையான வடிவமைப்பிலான ஆன்டிக் நகைகள் உள்ளிட்ட பல்வேறு கைவினை நகைத் தொகுப்புகள் இடம்பெற்றுள்ளன. இந்திய பாரம்பரிய நகைக் கலை நுட்பத்தையும் நவீன வடிவமைப்பையும் ஒருங்கிணைக்கும் வகையில் ஒவ்வொரு நகையும் நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. நூற்றாண்டுக்கும் மேலான பாரம்பரியத்தை கொண்டுள்ள கலாஷா ஃபைன் ஜுவல்ஸ், இந்தியாவின் பாரம்பரிய நகைத் தயாரிப்பு கலையைப் பாதுகாத்து, அதனை நவீன அழகியலுடன் இணைக்கும் முயற்சியில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. குறிப்பாக மணமகள்களுக்கான பிரத்யேக நகைத் தொகுப்புகள், சிறப்பு நிகழ்வுகளுக்கான ஆடம்பர நகைகள் மற்றும் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாக்கக்கூடிய பாரம்பரிய வடிவமைப்புகள் இந்தக் கண்காட்சியின் முக்கிய அம்சங்களாக இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் (எம்எல்ஏ) திருமதி தாஹிரா அவர்களை, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் ராணிப்பேட்டை மாவட்ட இளைஞரணி செயலாளர் பி.எஸ். முஸ்தபா ஜிலானி அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இந்த சந்திப்பின்போது, தொகுதி வளர்ச்சி மற்றும் பொதுநலன் தொடர்பான பல்வேறு விஷயங்கள் குறித்து நட்புறவான கலந்துரையாடல் நடைபெற்றது. மேலும், எம்எல்ஏ அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து, நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.



கர்மவீரர் பெருந்தலைவர் காமராஜர் 124 வதுபிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சு. முத்துசாமி பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வில் திமுக கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# New Zealand on tsunami alert after 5.9magnitude earthquake



*New Zealand authorities on Thursday lifted the tsunami warning issued after a 5.9-magnitude earthquake struck off the west coast of the South Island, saying the threat had eased following a revised assessment of the quake.*

*The National Emergency Management Agency said the advisory had been downgraded from a warning after determining that the earthquake was smaller than initially estimated, news agency AFP reported. Authorities, who had earlier urged people in affected coastal areas to "move immediately" to higher ground, later advised residents to remain cautious of "strong and unusual currents" along the shoreline.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.